கட்டுரை 03

சமாதானம் மற்றும் சகவாழ்வை
நோக்காகக் கொண்ட

# சமூகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்

## கட்டுரை - 03

வெளியீடு

ALL CEYLON JAMIYYATHUL ULAMA

UNITY HUB

UNITY | HUMANITY | DIVERSITY | PROSPERITY

# முஸ்லிம் பள்ளிவாசல்களின் அசாதாரணமான பரவல்

# முன்னுரை

இலங்கை பல்லின மற்றும் பல மதங்களைப் பின்பற்றும் மக்கள் வாழும் ஒரு நாடாகும். இந்தப் பன்மைத்துவத்தினுள் உள்ள பல்வேறு தரப்பினருக்கும் மத்தியில், கருத்து வேறுபாடுகள் உருவாகுவது தவிர்க்க முடியாத ஒரு விடயமாகும். ஆனாலும், இந்த நாட்டின் சமாதானத்தைத் தொடர்ந்தும் பேணிச் செல்ல வேண்டுமாயின், இக்கருத்து வேறுபாடுகளை, சமூகங்களுக்கிடையிலான வெறுப்பு, குரோதம் ஆகியவற்றை உருவாக்கும் காரணியாக மாற்றிக் கொள்ளக் கூடாது. இவ்வாறான கருத்து வேறுபாடுகள் உருவாகும்போது, சமூகங்களுக்கு இடையில் அந்நியோன்ய புரிந்துணர்வின் மூலம் பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மத மற்றும் இனக் குழுக்களுக்கு இடையில், அடிக்கடி எழுகின்ற பிரச்சினைகளை தெளிவுபடுத்துவதை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள "சமூகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்" என்ற இந்தக் கட்டுரைத் தொடர் எம் அனைவரது அவதானத்துக்கும் உட்பட வேண்டிய முக்கியமான கட்டுரைத் தொடர் எனக் கருதுகிறேன். சமூகத் தரப்புகளுக்கு இடையில் அர்த்தமுள்ள கலந்துரையாடலொன்றுக்கான அமைதியான வாயில்களைத் திறந்து, எமது பிரச்சினைகளை எமக்கு மத்தியிலேயே தீர்த்துக் கொள்ளும் வழிமுறையை நோக்கிய முக்கியமான கட்டுரைத் தொடராகவும் இதனை நான் காண்கிறேன்.

இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள முக்கியமான, யதார்த்தமான மற்றும் தர்க்க ரீதியான கருத்துக்களை நான் பாராட்டுகிறேன். மன எழுச்சியையும் வெறித்தனத்தையும் பின்னே தள்ளி இலங்கையர்கள் என்ற வகையில், எமது பாரம்பரிய இணைப்புக்களையும் சகோதரத்துவத்தையும் பாதுகாத்துக் கொண்டு, எமக்கு மத்தியில் உள்ள கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இதன் மூலம் சிறந்ததொரு வாயல் திறந்து கொடுக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

எமது கருத்தை ஒத்த கருத்துக்களையே ஏனையோரும் கொண்டிருக்க வேண்டும் என்று சிந்திப்பது பண்பாடான ஒரு முறை அல்ல. தான் கொண்டிருக்கும் கருத்திற்கு முரணான கருத்தைக் கொண்டிருப்பதற்கான உரிமை ஏனையோருக்கு உள்ளதை நாட்டின் அரசியலமைப்பும் உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, கலந்துரையாடல்கள் மூலம் உடன்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு வகை செய்வோம். அவ்வாறு செய்வதற்குக் கடினமாகின்ற சந்தர்ப்பங்களில், எனது கருத்துக்கு முரணான கருத்துக்களைக்

கொண்டிருப்பதற்கு ஏனையோருக்கு பூரண சுதந்திரமும் உரிமையும் உள்ளது என்ற அடிப்படை மனித உரிமை சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டு, சமாதானமாகச் செயற்படுவதற்கு நாம் அர்ப்பணிப்போம். எவ்வாறாயினும், இந்தக் கட்டுரைத் தொடர் மூலம், எம் அனைவருக்கும் புதிய சிந்தனைத் தொடக்கமொன்று வழங்கப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்வதற்கு எந்தவொரு கஷ்டமும் இல்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

சமூகப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்குப் பொருத்தமான வழிமுறை, சமாதானமான கலந்துரையாடல்கள்தான் என இந்தக் கட்டுரைத் தொடர் எமக்கு பலமாகச் சொல்கின்றது.

ஜயங் வெரங் பஸவதி
துக்கங் ஸெதி பராஜிதோ
உபஸன்தோ சுகங் ஸெதி
ஹித்வா ஜய பராஜயங் (தம்ம பதம்)

கருத்து: "வெற்றி பெறுபவன் பிறருடைய கோபத்தை தன் மீது திருப்பிக் கொள்கின்றான். தோல்வியுற்றவனோ கவலை கொள்கின்றான். வெற்றி தோல்வி இரண்டையும் துறந்து திருப்தியடைந்தவன் சுகமாக வாழ்கின்றான்"


சாஸ்ரபதி பண்டித பூஜ்ய கலகம தம்மரங்ஸி தேரர்,
விகாரை தலைமை,
ஶ்ரீ ஹத்போதி விகாரை,
கிருல வீதி,
கொழும்பு 05.

# அறிமுகம்

சமாதானத்தையும் ஐக்கியத்தையும் நோக்காகக் கொண்ட "சமூகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்" எனும் இந்தக் கட்டுரைத் தொடரைத் தயாரிக்கையில் நாம் பிரதானமாக கவனம் செலுத்தியது பன்மைத்துவத்தினால் அலங்கரிக்கப்பட்ட இலங்கை சமூகத்தின் மத்தியில் நட்புறவையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற மிக உயர்ந்த இலக்கையாகும்.

பல்வேறுபட்ட இன, மத மற்றும் கலாசாரங்களினால் கட்டியெழுப்பப்பட்டுள்ள எமது சமூகம் ஒற்றுமை மற்றும் ஐக்கியத்தின் பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டுமாக இருந்தால் அனைத்து குழுக்கள் மத்தியிலும் புரிந்துணர்வை ஏற்படுத்துவது அத்தியவசியமான ஒரு விடயமாகும். இப்புரிந்துணர்வு இல்லாவிட்டால் அடுத்தவர் மீதான சந்தேகம், நம்பிக்கையின்மை, பயம் போன்ற அழிவை ஏற்படுத்தும் காரணிகள் உருவாகுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன. எந்தவொரு மதமும் இவ்வாறான சிக்கலான சமூக நிலையை அனுமதிக்காது. கலந்துரையாடல்களின் அடிப்படையிலான சமூக தொடர்புகளின் மூலமாகப் புரிந்துணர்வை ஏற்படுத்தி சமூக ஐக்கியத்தை கட்டியெழுப்புவது காலத்தின் தேவையாகும்.

ஒவ்வொரு மதத்திலும் உள்ள வணக்க வழிபாடுகள் மற்றும் கலாசாரங்கள் பற்றி நாம் அனைவரும் அறிந்து கொள்ள முயற்சிப்பது அத்தியவசியமான விடயமென நாம் நம்புகிறோம். அதேபோன்று சமூக ஐக்கியத்தை ஒரு உறுதியான அடித்தளத்தின் மீது கட்டியெழுப்புவதாயின் எல்லா மதங்களும் அம்மதத்தின் அடிப்படையான அம்சங்களைப் பற்றி ஏனைய மதத்தவர்களுக்கு தெளிவையும் புரிந்துணர்வையும் வழங்குவது மிக முக்கியமானதாகும்.

இஸ்லாம் மற்றும் முஸ்லிம் சமூகத்தைப் பற்றி பல்வேறு பிழையான கருத்துக்கள் ஏற்பட்டுள்ளதென்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இப்பிழையான கருத்துக்களை தெளிவுபடுத்தி உண்மை நிலையை விளக்குகின்ற பொறுப்பை நாம் தவறவிட்டுள்ளோம் என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம். காலம் கடந்தேனும் இந்த மிக முக்கியமான பணியை சிறிதளவேனும் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததை ஒரு பாக்கியமாகக் கருதுகிறோம்.

ஆதார பூர்வமான கலந்துரையாடலுக்கான வாயிலைத் திறந்து கொடுப்பதை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்டுரைத் தொடராக இது இருப்பதால் இதில் உள்ளடங்கியுள்ள காரணிகளைப் பற்றிய உங்களது தூய்மையான கருத்துக்களை நாம் மிகவும் உயர்வாகக் கருதுகிறோம். கலந்துரையாடலைப் புறக்கணிக்காது கலந்துரையாடும் சமூகத்தின் மத்தியில் எல்லா விடயங்களையும் சுமுகமாக தீர்த்துக் கொள்வதற்காக உறுதியுடன் செயல்பட இலங்கைத் தாயின் மக்களாகிய நாம் ஒன்றாகக் கைகோர்த்துக் கொள்வோம். சௌபாக்கியம் நிறைந்த அபிவிருத்தி அடைந்த ஒரு இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.


வடிவமைப்பு:
அஷ்-ஷைக் முர்ஷித் முழப்பர்
அஷ்-ஷைக் மாஹிர் ரம்தீன்
அஷ்-ஷைக் இர்ஷாத் ஹில்மி
அஷ்-ஷைக் நு்.மான் உமர்
சகோதரர் முஹம்மத் தஹ்லான்
சகோதரர் அயாஸ் ஸாலிஹ்
தொலைபேசி : (+94) 0 773 185353
மின் அஞ்சல் : info@acju.lk
இணையம் : www.unityhub.org

## உள்ளடக்கம்


- 10 வீதமுள்ள முஸ்லிம்களுக்கு 6300 பள்ளிகள் அவசியமா?
- மதமொன்றின் சமூகப் பணி
- மதஸ்தலம் ஒன்றின் அவசியம்
- இஸ்லாமிய மதஸ்தலம்
  - மஸ்ஜித் ஒரு வழிபாட்டு இடமாகும்
    - தொழுகை
    - வெள்ளிக் கிழமை ஜும்ஆ உரையும் தொழுகையும்
    - மையித்துக்காக தொழும் தொழுகை
    - ஹஜ் மற்றும் ரமழான் பெருநாள் தொழுகைகள்
  - மஸ்ஜித் சமூக, கலாசார மற்றும் கல்வி நிலையமாகும்
    - சமூக மற்றும் கலாசார நிகழ்ச்சிகள்
    - கல்விசார் நிகழ்ச்சிகள்
- மஸ்ஜித் தொடர்பான சட்டங்கள்
  - முஸ்லிம் பள்ளிகள் மற்றும் நன்கொடை அல்லது வக்பு தொடர்பான சட்டவாக்கம்
  - மஸ்ஜித் நிர்மாணம்
  - மஸ்ஜித் நிர்வாகம்
- மஸ்ஜிதும் முஸ்லிம் சமூகமும்
- மதஸ்தலங்கள் பற்றிய மதக் கருத்துக்கள்
  - இஸ்லாமிய படிப்பினைகள்
  - பௌத்த படிப்பினைகள்
- முடிவுரை

**கேள்வி:** முஸ்லிம்கள் தமது தேவைகளுக்கு அதிகமாக பள்ளிகளை (மஸ்ஜித்களை) அமைத்திருக்கின்றனர். இவ்வாறு செய்வதற்கு காரணம் பிற மதங்களை விட முன்னிற்பதற்காகவா?

**விளக்கம் :**

## 10 வீதமுள்ள முஸ்லிம்களுக்கு 6300 பள்ளிகள் அவசியமா?

"71 வீதம் பௌத்தர்கள் வாழும் நாட்டில் 9800 விகாரைகள் மாத்திரமே இருக்கின்றன. ஆனால் 10 வீதமுள்ள மரக்கல சமூகத்திற்கு 6300 பள்ளிகள் ஏன்? என வினவுவதைக் கேட்கலாம்".

மேலே மேற்கோள் காட்டப்பட்டது முஸ்லிம்களுக்கு எதிராக சமூகத்தில் பரவிவரும் போலிக் குற்றச்சாட்டாகும். இவ்வாறான செய்திகளை வெளியிடுவதற்கு முன்னர் உண்மையை ஆராய்ந்து பார்ப்பது அனைவரினதும் கட்டாயக் கடமையாகும். உண்மைக்குப் புறம்பாக, எந்த ஆதாரமும் இன்றி இவ்வாறு கருத்துக்களை வெளியிடுவதை எந்த மதமும் அனுமதிப்பதில்லை.

முஸ்லிம் பள்ளிவாயல்கள் தொடர்பாகச் செயற்படும் இரண்டு அரச நிறுவனங்களாக வக்ப் சபையும் முஸ்லிம் சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் காணப்படுகின்றன. அவர்கள் மூலம் கிடைத்த தகவல்களின் படி இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள பள்ளிவாயல்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து இருநூற்றை விட குறைவானதாகும். இதுதவிர பிற மதங்களுக்கு பதிவு செய்யப்படாத மதஸ்தலங்கள் காணப்படுவது போன்று முஸ்லிம்களுக்கும் பதிவு செய்யப்படாத சிறுதொகை பள்ளிவாயல்கள் காணப்படுவதை மறுக்க முடியாது.

முஸ்லிம்களுக்கு சமூக கலாசார மற்றும் மத நிகழ்வுகளை நடாத்துவதற்கு மஸ்ஜித்கள் அவசியம். எனினும் மேலே குறிப்பிட்டது போன்று இலங்கையில் 6300 முஸ்லிம் பள்ளிவாயல்கள் இல்லை என்பதை உறுதியாகக் கூறுகின்றோம்.

## மதமொன்றின் சமூகப் பணி

பண்பாடான சமூகமொன்றைக் கட்டியெழுப்பி, அதில் நன்னடத்தைகளை வளர்க்கும் சமூகப் பொறுப்பு அனைத்து மதங்களுக்கும் உண்டு.

கூகுள் (google) வலைத்தளத்தில் செக்ஸ் (sex) என்ற சொல்லை அதிகமாகத் தேடும் நாடுகள் வரிசையில் இலங்கை தொடர்ந்தும் இருவருடங்களாக முதலிடத்தை பெற்றுள்ளது. அறிக்கைகளின் படி தனியாள் மதுபாவனை மற்றும் தற்கொலை செய்து கொள்ளல் போன்றவற்றில் நாம் உலகில் நான்காவது இடத்தில் இருக்கின்றோம். பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம், நெருங்கிய உறவுகளுக்கிடையேயான பாலியல் துஷ்பிரயோகம், கொலை, சட்டவிரோதக் கருத்தரிப்பு போன்றவற்றில் நாம் முன்னிலை வகிக்கிறோம்.

இவ்வன்முறைகள் மற்றும் முறைகேடுகளின் அதிகரிப்பு நமக்கு விளக்குவது என்ன? அனைத்து மதங்களும் தத்தமது பணியை நிறைவேற்றத் தவறியிருப்பதை அல்லவா?

பாலியல் துஷ்பிரயோகம், கொலைகள் தொடர்ந்து நடைபெற்ற ஒரு பிரதேசத்தில் இவ்வாறான வன்முறைகள் நடப்பதற்கான சமூகவியல் மூலகாரணிகளை கண்டறிந்து தமக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பிரிவினரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தது.


இவ்வாராய்ச்சியின் போது வெளிப்படுத்தப்பட்ட முக்கிய காரணி யாதெனில், அப்பிரதேச பௌத்த விகாரையின் பிரதான நாயக்க சுவாமியின் மரணத்தின் பின்னர் விகாரையுடனான மக்களின் தொடர்புகள் சீர்குலைந்து, மதக் கோட்பாடுகளை விட்டும் விலகி மக்கள் இவ்வாறான வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதாகும்.

முழுச் சனத்தொகையில் முஸ்லிம்களின் வீதம் 9% ஆகும். எனினும் மொத்த சிறைக் கைதிகளில் முஸ்லிம்களின் வீதம் 20% என்பது எங்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவை மதஸ்தலங்கள் இருக்க வேண்டியதன் அவசியத்தையும் அவை பிரதேச மக்களுடன் நெருங்கிய தொடர்புகளை கட்டியெழுப்பி, நன்னடத்தைகளை வளர்க்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. மதஸ்தலம் ஒன்று இருக்கும் போதே இவ்வாறான துரதிஷ்ட நிகழ்வுகள் நடைபெறும் போது மதஸ்தலம் ஒன்று இல்லாத நிலையில் நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

## மதஸ்தலம் ஒன்றின் அவசியம்

அனைத்து மதத்தினரும் தத்தமது மத வழிபாடுகளை மேற்கொள்ள மதஸ்தலங்களை அமைத்துக் கொள்வது நாம் பொதுவாகக் காணும் ஒரு நிலையாகும். பிரார்த்தனைகள், வணக்க வழிபாடுகள், மத சம்பந்தமான உரைகளை நிகழ்த்துதல், மத சார்பான கல்வியைக் கற்பித்தல், சமூக மற்றும் கலாசார நிகழ்ச்சிகளை நடாத்துதல் போன்ற மனிதனுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் இங்கு நடைபெறுவதை நாம் கண்கூடாகக் காணலாம்.



ஒரு குடியிருப்புப் பிரதேசத்தில் மதஸ்தலம் ஒன்று இல்லையெனின் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு தடை ஏற்படுவதுடன் மக்களின் ஆன்மீக மற்றும் பண்பாட்டு வளர்ச்சி பாதிப்புக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் அதிகமாகும். மேலே கூறப்பட்டது போன்று கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம் போன்றன அதிகமாக இடம்பெறும் பிரதேசமொன்றில் நடாத்தப்பட்ட

ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட முக்கியமான உண்மை யாதெனில் அங்கு ஆன்மீக மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கான மதஸ்தலங்கள் காணப்படாமை அல்லது இருக்கும் மதஸ்தலங்களுடன் பிரதேசவாசிகள் தொடர்பின்றி இருப்பதாகும்.

இச்சமூக உண்மையைக் கவனத்தில் கொள்ளும் போது, பண்பாடுமிக்க சமூகத்தை எதிர்பார்க்கும் அனைவரும் செய்ய வேண்டியது, மதஸ்தலங்கள் பற்றி ஆதாரமில்லாமல் எதிர்ப்புத் தெரிவிப்பதை தவிர்ந்து, நேர்மையாக அது பற்றிய நேர்மறை எண்ணங்களை உண்டாக்குவது அல்லவா? இந்நியாயமான காரணிகளை அடிப்படையாக வைத்து, அனைத்து பிரதேசங்களிலும் காணப்படும் அனைத்து மதஸ்தலங்களும் மக்களின் நலனுக்காகவே அமைக்கப்பட்டுள்ளன என்ற அடிப்படை உண்மையை ஏற்றுக் கொள்வது கடினமான விடயம் அன்று.

## இஸ்லாமிய மதஸ்தலம்

இஸ்லாமிய மதஸ்தலமான பள்ளிவாசல் "மஸ்ஜித்" என்ற பெயரில் அழைக்கப்படும். தினந்தோறும் ஐவேளை நடைபெறும் வழிபாடு 'தொழுகை' எனப்படும். இத்தொழுகையில் காணப்படும் 'சுஜூத்' எனும் நெற்றியை நிலத்தில் வைக்கும் ஒரு நிலையை அடிப்படையாக வைத்தே இது மஸ்ஜித் என அழைக்கப்படுகிறது. மஸ்ஜிதின் பிரதான நோக்கங்களை பின்வருமாறு வரையறுக்கலாம்.

"மஸ்ஜித் ஒன்றின் அடிப்படை நோக்கங்களாக குறிப்பிட்ட முஸ்லிம் சமூகத்தின் மத, சமூக, கலாசார, ஆன்மீக மற்றும் கல்விசார் செயற்பாடுகளின் முன்னேற்றத்திற்கு உதவுதல், அவற்றை அபிவிருத்தியடையச் செய்தல் மற்றும் இஸ்லாமிய மதத்தைப் பாதுகாத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்".

## மஸ்ஜித் ஒரு வழிபாட்டு இடமாகும்

### தொழுகை

அனைத்து முஸ்லிம்களுக்கும் ஐவேளைத் தொழுகை கட்டாயக் கடமையாகும். தொழுகையை தனியாக நிறைவேற்றுவதை விட கூட்டாக மஸ்ஜிதில் நிறைவேற்றுவது 27 மடங்கு அதிக நன்மைகளைப் பெற்றுத் தருவதாக இஸ்லாம் போதிக்கின்றது. இவ்வாறு பிரதேச வாசிகள் ஒற்றுமையுடன் ஒன்றிணையும் சந்தர்ப்பம் அவர்கள் மத்தியில் பலமான சகோதரத்துவம், வினயமான நல்லெண்ணம் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு போன்றன வளர்வதற்குக் காரணமாக அமைகின்றது.



கடமையான ஐவேளை தொழுகைகளை மஸ்ஜிதில் நிறைவேற்றும் முறை

சமூக மேம்பாட்டுக்கு அத்தியவசியமான ஒற்றுமையை வளர்ப்பதற்குக் கூட்டுத் தொழுகையின் பாரிய பங்களிப்பை எவரால் மறுக்க முடியும் என நாம் வினவுகிறோம்.



புராதன காலத்தில் உயர்ந்த இடத்தில் நின்று தொழுகைக்காக அழைப்பு விடுவதை (அதான கூறுவதை) காட்டும் சித்திரம்

இத்தொழுகைகளில் அதிகாலை 4.30 மணியளவில் பஜ்ர் தொழுகையையும் இரவு 8.00 மணியளவில் இஷாத் தொழுகையையும் நிறைவேற்ற வேண்டும். தமது பிரதேசத்தில் மஸ்ஜித் மிகத் தொலைவில் அமைந்திருப்பின் அதிகாலையிலும் இரவிலும் கூட்டுத் தொழுகைக்கு செல்வது சிரமமான விடயமாகும். இதன் காரணமாக வயோதிபர்கள் மற்றும் நோயாளிகளின் வசதிகளை கருதி, ஒவ்வொரு பிரதேசங்களிலும் சிறு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு அரச அனுமதியுடன் சிறு மஸ்ஜித்கள் அமைக்கப்படுகின்றன.

இத்தகைய சிறு மஸ்ஜித்கள் அமைப்பதற்கான காரணம் மேலே குறிப்பிடப்பட்ட நோக்கமே அன்றி, வேறு எந்த தப்பான நோக்கமும் அல்ல என்பதை உறுதியாகக் கூறுகிறோம்.

மஸ்ஜித் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து அண்ணளவான தூரத்தில் மக்கள் வாழ்வார்கள் எனின் ஐவேளை தொழுகைக்கும் அழைப்பு விடுப்பதற்கு மூன்று நிமிட அதான் ஒலிபரப்பப்படும். இதற்காக ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுவதோடு இதன் மூலம் தொழுகையை சரியான நேரத்தில் நிறைவேற்றுவதற்கு அனைவருக்கும் சந்தர்ப்பம் உருவாக்கப்படுகிறது.

## வெள்ளிக் கிழமை ஜும்ஆ உரையும், தொழுகையும்

ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் ஆங்காங்கே சிறு மஸ்ஜித்களில் கூட்டாக தொழுகையை நிறைவேற்றும் அனைவரும், பிரதேசத்தில் உள்ள பிரதான மஸ்ஜிதில் ஒன்றுகூடுவர். இத்தொழுகையை கூட்டாக அன்றி தனியே தொழ முடியாது.



ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்தப்படும் முறை

“சுமார் இரு மில்லியன் இலங்கை முஸ்லிம்களுள், ஆகக் குறைந்தது பருவமடைந்த ஒரு மில்லியன் ஆண்கள் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் வெள்ளிக் கிழமைகளில் கட்டாயமாக ஒன்றுகூடுவதற்கு அதிக இடவசதியைக் கொண்ட பெரிய மஸ்ஜித்களின் அவசியம் பற்றி உணர்வது கடினமான காரியம் அன்று”.



இடப் பற்றாக்குறை காரணமாக வெள்ளிக் கிழமை ஜும்ஆ தொழுகையை மஸ்ஜிதிற்கு வெளியே நிறைவேற்றுதல்

சில மஸ்ஜித்களில் இக்கட்டாயக் கடமையை நிறைவேற்ற இடப் பற்றாக்குறை ஏற்படுவதன் காரணமாக மஸ்ஜிதுக்கு வெளியே தொழுகையை நிறைவேற்றும் சந்தர்ப்பங்களை நாம் காண்பது பொதுவான விடயம்.

இதுவும் நமக்கு எடுத்துக் கூறுவது சில பிரதேசங்களில் உள்ள மஸ்ஜித்களின் இடப் பற்றாக்குறையை

அல்லவா? ஜும்ஆ தொழுகையின் மிக முக்கியமான அங்கமாக பிரதேச வாசிகளுக்கு நடாத்தப்படும் மத ரீதியான சொற்பொழிவு காணப்படும். சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்ற மார்க்க அறிஞர்களால் சிங்கள மொழியில் உரை நிகழ்த்தப்படும். இவ்வுரைகளை செவிமடுக்க விரும்பின் தயக்கமின்றி எம்மை தொடர்பு கொள்ளவும். இவ்வுரை தமிழில் நடைபெறுமாயின் அதனை சிங்கள மொழிக்கு மொழி மாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து தர முடியும். இச்செயற்பாடுகள் அனைத்தும் முழு வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறுவதோடு, இவ்வுரையின் மூலம் சமூகத்துக்கோ, சமூக நல்லிணக்கத்துக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லை என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

## மையித்திற்கான ஜனாஸா தொழுகை

முஸ்லிம் ஒருவரின் ஜனாஸாவை (பிரேதத்தை) அடக்கம் செய்வதற்கு முன்பு நிறைவேற்ற வேண்டிய கடமைகளுள் ஜனாஸா தொழுகை எனப்படும் மையித்திற்கான தொழுகையும் ஒன்றாகும். இதன்போது ஊரார் மட்டுமல்லாது வெளி ஊர்களைச் சேர்ந்த உறவினர்களும் கலந்து கொள்வதால் அதிக இடவசதியுடன் கூடிய மஸ்ஜித் ஒன்றின் தேவை ஏற்படுகிறது.


ஜனாஸாத் தொழுகையை மஸ்ஜிதில் நிறைவேற்றுவதை காட்டும் படம்

## ஹஜ் மற்றும் ரமழான் பெருநாள் தொழுகைகள்

சர்வதேச முஸ்லிம்கள் அனைவரும் ரமழான் மாதம் முடிந்த பின்னரும், துல்ஹஜ் மாதத்தின் பத்தாம் நாளன்றும் வருடத்தின் இரு நாட்களில் பெருநாள் கொண்டாடுகின்றனர். இப்பெருநாள்களுக்கான தொழுகைகளும், பிரதேசத்தில் உள்ள மஸ்ஜித்களில் அனைவரும் ஒரேநேரத்தில் ஒன்றுகூடி கூட்டாகவே நிறைவேற்றப் படுகின்றன. பெருநாள் தொழுகைக்காக ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் அனைவரும் கலந்து கொள்வதால், இரண்டு மில்லியன் மக்களும் ஒரே நேரத்தில் ஒன்றுகூடக்கூடிய வகையில் அதிக இடவசதியுடன் கூடிய மஸ்ஜித்கள் குறிப்பிட்ட பிரதேசங்களில் தேவைப்படுகின்றன.


மஸ்ஜித்களுக்கு மேலதிகமாக கடற்கரைகளில் நடாத்தப்படும் பெருநாள் தொழுகைகளில் கலந்து கொள்ளும் மக்கள் கூட்டம்

ரமழான் மாதத்தில் அநேக செயற்பாடுகள் மஸ்ஜிதை மையமாக வைத்தே நடைபெறுகின்றன. ரமழான் மாத நோன்பை கூட்டாகத் திறத்தல் (இப்தார்), விசேட இரவு நேர தொழுகைகளில் கூட்டாக ஈடுபடல் மற்றும் இம்மாதத்தின் இறுதிப் பத்து தினங்களில் மஸ்ஜிதிலே தங்கி வணக்க வழிபாடுகளில் ஈடுபடுதல் (இஃதிகாப்) என்பன நடைபெறுகின்றன.

மேலே குறிப்பிட்ட அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்ற, போதியளவு மஸ்ஜித்களை அமைப்பதையன்றி வேறு தீர்வுகள் கிடையாது. தயவுசெய்து சிந்தித்து பாருங்கள். ஆதாரமின்றி மதஸ்தலங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதை விட்டுவிட்டு உண்மை எதுவென தெரிந்து அதனடிப்படையில் யதார்த்தமாக செயற்படுவது நம் கடமையல்லவா?

## மஸ்ஜித் சமூக, கலாசார மற்றும் கல்வி நிலையமாகும்

பிற மதங்களின் மதஸ்தலங்களைப் போன்றே மஸ்ஜித்களும் வழிபாடுகளைத் தவிர, ஒரு முஸ்லிமின் வாழ்க்கையின் சமூக, கலாசார மற்றும் கல்விசார் செயற்பாடுகளுக்குப் பாரிய பங்களிப்புச் செய்கின்றன.

### சமூக மற்றும் கலாசார நிகழ்ச்சிகள்

நிகாஹ் எனப்படும் இஸ்லாமிய விவாக பதிவு நிகழ்வுகள் மஸ்ஜிதிலேயே நடைபெறும். பல பிரதேசங்களில் ஸகாத், ஸதகா மற்றும் ஸகாதுல் பித்ர் போன்ற நன்கொடைகள் மஸ்ஜித்களை அடிப்படையாகக் கொண்டே நடைபெற்று-வருகின்றன. பல்வேறுபட்ட தனிநபர் மற்றும் சமூகப் பிரச்சினைகள் ஏற்படும் போது அதனை தீர்த்துவைக்கும் மையமாக மஸ்ஜித் திகழ்கிறது. நிவாரண உதவிகளைப் பகிர்ந்தளித்தல், இரத்ததான முகாம்கள், பல்வேறுபட்ட மதசார்பான நிகழ்வுகள், சிரமதானப் பணிகள் மற்றும் விசேட செய்திகளை அறிவித்தல் போன்ற செயற்பாடுகளும் மஸ்ஜிதை மையமாகக் கொண்டு நடைபெறுகின்றன.



மஸ்ஜிதில் நடைபெறும் நிகாஹ் எனும் திருமண நிகழ்வு

மஸ்ஜித்கள் வெறுமனே முஸ்லிம்களுக்கான வழிபாட்டு இடமாக மாத்திரம் அல்லாது முழு சமுதாயத்துக்குமான நலன்களைக் கருத்திற் கொண்டு செயற்படும் மக்கள் நிலையமாகத் தொழிற்படுகிறது என்பது மேற்கூறிய காரணிகள் மூலம் தெளிவாகின்றது என நம்புகிறோம். சமூக நலன்கருதிச் செயற்படும் இவ்வாறான மதஸ்தலங்கள் பற்றி, ஆதாரமின்றி குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது ஏற்கனவே மோசமடைந்துவரும் சமூக நல்லொழுக்கத்தை இல்லாதொழிக்கும் ஓர் செயற்பாடல்லவா?

### கல்விசார் நிகழ்ச்சிகள்

சமூகத்தின் பண்பாட்டுச் சீர்குலைவை தீவிரமாக உணர்ந்து பிள்ளைகளை ஞாயிற்றுக் கிழமைகளிலும், போயா தினங்களிலும் அறநெறிப் பாடசாலைகளில் வைத்து கொள்வதற்காக வேண்டி, தனியார் வகுப்புக்களை தடைசெய்யும் நிலை இன்று உருவாவதற்கு காரணம் பாடப்படிப்பை போன்றே பண்பாட்டு வளர்ச்சியின் முக்கியத்துவமும் அவசியமும் உணரப்பட்டதால் அல்லவா?

அவ்வாறே தூய்மை, தொழுகையின் ஒழுங்கு விதிகள், ஆடை, உணவு,

திருமண வாழ்க்கை, உறவினருடனான தொடர்புகள், சகவாழ்வு போன்ற வாழ்க்கையின் அடிப்படை விடயங்களை அனைத்து முஸ்லிம்களும் அறிந்திருத்தல் வேண்டும். இதனை நோக்கமாகக் கொண்டு 5 - 10 வயது வரையான பிள்ளைகளுக்கு வாரநாட்களில் அறநெறிப் பாடசாலை நடாத்தப்படும். சிலர் இந்த அறநெறிப் பாடசாலையினை 'மக்தப்' என்று அழைக்கின்றனர். பிற மதங்களில் அறநெறிப் பாடசாலைகள் வாரஇறுதி நாட்களில் நடைபெறுவது போன்று சிறுவர்களுக்கான இந்த அறநெறிப் பாடசாலை தினமும் 1 அல்லது 1 1/2 மணித்தியாலங்கள் நடாத்தப்படுகின்றன.



இஸ்லாமிய அடிப்படை மூலாதாரங்கள் யாவும் அரபு மொழியில் இருப்பதனாலும் தொழுகை மற்றும் ஏனைய வழிபாடுகளும் அரபு மொழியில் நடைபெறுவதனாலும் இப்பாடசாலைகளில் அரபு மொழி கற்றுக் கொடுக்கப்படுகின்றது.

இலங்கையில் கல்வி மற்றும் கலாசார அமைச்சினால் 1969 இல் "இலங்கையில் கல்வி" தொடர்பாக நடாத்தப்பட்ட நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் "கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் இருந்து அந்த வருடம் வரை இலங்கையில் கல்வி" எனும் தொனிப்பொருளுடன் வெளியிடப்பட்ட ஆவணத்திலிருந்து கீழ்வரும் பகுதி சுருக்கமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

"சிங்கள அரச வம்ச காலத்திலிருந்து போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களிலும் தொடர்ந்து இன்றுவரை "மக்தப்" என்ற பெயரில் முஸ்லிம் பள்ளிகளுடன் இணைந்த இஸ்லாமிய அறநெறிப் பாடசாலைகள் நடைபெற்றுவருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது."

இந்த ஆவணத்தில் கேம்பிரிஜ் பல்கலைக்கழக பேராசிரியர் எ.ஜே. ஆர்பரி "மக்தப்" என்ற சொல்லை பின்வருமாறு ஆங்கிலத்தில் வரையறுத்தார். அதனை தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**Professor A.J. Arberry of Cambridge**

The maktab has been defined as "a primary school often attached to a mosque, the chief business of which is to instruct boys (and girls) in those portions of the Koran which a Mohammedan is expected to know by heart in order to perform his devotions and other religious functions. Sometimes instruction in reading, writing and simple arithmetic was also included in the curriculum."

"முஹம்மத் ஒருவனுக்கு (முஸ்லிமுக்கு) தனது வழிபாடுகள் மற்றும் ஏனைய மத செயற்பாடுகளை மேற்கொள்ள, அல்குர்ஆனின் மனனம் செய்யவேண்டிய பகுதிகளை ஆண், பெண் பிள்ளைகளுக்கு கற்பிப்பதற்கான மஸ்ஜித்துக்கு

தொடர்புள்ள ஆரம்பபாடசாலை என 'மக்தப்' என்ற சொல்லை வரையறுக்கலாம். சிலவேளைகளில் வாசிப்பு, எழுதுதல் மற்றும் எளிய கணித வழிமுறை என்பன பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும்."

அதன்படி 'மக்தப்' எனப்படுவது தீவிரவாதக் கோட்பாடுகளையோ அல்லது சமூகத்துக்கு எதிரான செயற்பாடுகளையோ மேற்கொள்ளும் நிலையங்கள் அல்ல என்பதையும் அவை இன்று நேற்று தோன்றிய நிலையங்கள் அல்ல என்பதையும் தெரியப்படுத்த விரும்புகிறோம்.
இக்கட்டுரையை முழுமையாக கீழ்வரும் இணையத்தள இணைப்பில் பெற்றுக் கொள்ளலாம்.
<http://www.azeezfoundation.com/the-muslim-philosophy-of-education>


அஹதிய்யா பாடசாலை ஒன்றில் நடாத்தப்பட்ட கலாசார நிகழ்வு

அஹதிய்யா எனப்படும் வார இறுதி நாட்களில் நடைபெறும் அறநெறிப் பாடசாலைகளும் மஸ்ஜித்களில் நடைபெறுகின்றன. ஆரம்ப பாடசாலைகளும் மாணவர்களின் தனியார் வகுப்புக்களும் மஸ்ஜித்களில் நடைபெறுகின்றன.

மேற்குறிப்பிட்ட அறநெறிப் பாடசாலைகள் பூரண வெளிப்படைத் தன்மையுடனும், பூரண சட்டவியல் அடித்தளத்துடனும் முஸ்லிம் கலாசாரத் திணைக்களத்தில் பதிவுசெய்து அவர்களின் அனுமதி, அனுசரணையுடன் அனுமதிக்கப்பட்ட பொதுப் பாடநெறி மூலம் நடைபெறுகிறது.

ஆயிரம் ஆண்டுகளாக பிள்ளைகளின் ஆன்மீக வளர்ச்சிக்கு பங்காற்றிவரும் மஸ்ஜிதுடன் இணைந்த அறநெறிப் பாடசாலைகள் பற்றி எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அது எத்தகைய பண்பாடற்ற செயல் என நாம் கேட்க விரும்புகிறோம்.


வயதுவந்தோருக்காக நடாத்தப்படும் கல்விசார் செயலமர்வு

தாய் நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்க உள்ள இன்றைய பிள்ளைகள் இன, மத, பேதமின்றி பண்பாடுமிக்க நன்னடத்தைகளுடன் கூடிய பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்பது எமது நேர்மையான எண்ணமாகும். பிள்ளைகளுக்கு மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொடுத்து, பண்பாட்டினை வளர்க்கும் புனித இடம் அறநெறிப் பாடசாலையைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்.

பெரியோருக்கான கல்வி நிலையமாகவும் மஸ்ஜித் விளங்குகிறது. இஸ்லாமிய அறிஞர்களின் உரைகள் மற்றும் பல்வேறுபட்ட கல்விசார் பயிற்றுவிப்பு நிகழ்ச்சிகள் மஸ்ஜிதில் நடைபெறுகின்றன. இவ்வாறான கல்விசார் பணிகள் ஆற்றப்படுகின்றமையால் ஒரு முஸ்லிமின் வாழ்க்கையில் மஸ்ஜித் முக்கிய இடம் வகிக்கின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் மஸ்ஜிதில் மேற்கொள்வதற்கான அனுமதி, இலங்கைப் பாராளுமன்ற சட்டவாக்கம் மூலம் நிறுவப்பட்டுள்ள வக்ப் சபையின் செயற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது என தெரிவிக்க விரும்புகிறோம்.

பண்பாடுமிக்க சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு மார்க்கக் கல்வி எவ்வளவு முக்கியம் என்பதை விளங்கிக் கொள்வது யாருக்குக் கடினம் என்பதை நாம் வினவ விரும்புகிறோம். மார்க்கக் கல்வியைப் பெற்றுக் கொள்ளாமல் பண்பாடுமிக்க சமூகம் ஒன்றை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும்? எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்க, பிள்ளைகளை இவ்வாறான அறநெறிப் பாடசாலைக்கு அனுப்புவது எமது கடமையல்லவா? 5-10 வயதான 5 லட்சம் முஸ்லிம் பிள்ளைகளின் மார்க்கக் கல்விக்கு மஸ்ஜித்தைத் தவிர வேறு ஏதேனும் தீர்வு உண்டா? தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்.

## மஸ்ஜித் தொடர்பான சட்டங்கள்

மஸ்ஜிதுடன் தொடர்பான அனைத்து விவகாரங்களும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டவாக்கத்திற்கு ஏற்பவே நடைபெறுகின்றன. முதலில் இந்த சட்டவாக்கம் தொடர்பான மூலகாரணிகளை ஆராய்ந்து அதன்பின் மஸ்ஜித் நிர்மாணம் மற்றும் நிர்வாகம் பற்றி கலந்துரையாடுவோம்.

## முஸ்லிம் பள்ளிகள் மற்றும் நன்கொடை அல்லது வக்ப் தொடர்பான சட்டவாக்கம்

முஸ்லிம் பக்தர்கள் தமது பக்தி காரணமாக நற்கருமங்களுக்காக வழங்குகின்ற சொத்துக்கள், நன்கொடைகள் அல்லது வக்ப் சொத்துக்கள் போன்றன நன்கொடை மன்றத்தில் வைப்புச் செய்யப்படும். இச்சொத்துக்களுக்கு யாரும் உரிமை கோருவதில்லை. அத்துடன் அச்சொத்துக்கள் என்றும் நிலைத்திருக்கும். நன்கொடை மன்றத்திற்குக் கிடைக்கும் சொத்துக்களையும், வளங்களையும் விற்பதோ அல்லது பிறருக்கு உரிமையாக்குவதோ தடைசெய்யப்பட்டதாகும்.

பௌத்த விகாரைகளை நிர்வாகம் செய்வதற்கு "பௌத்த விகாரைகள மற்றும் தேவாலயங்கள் தொடர்பான சட்டவாக்கம்" இருப்பது போன்று முஸ்லிம் நன்கொடை நிதி தொடர்பாக நடைமுறையில் இருப்பது 1956 இன் 51ம் இலக்க "முஸ்லிம் பள்ளிகள் மற்றும் நன்கொடை அல்லது வக்ப் சட்டவாக்கமாகும்". மேற்கூறிய சட்டவாக்கம் 1962 இலக்கம் 21ம் மற்றும் 1982 இலக்கம் 33ம் சட்டவாக்கங்கள் மூலம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. வக்ப் சபை அரசினால் தேர்ந்தெடுக்கப்படும். இது வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்படும்.

முஸ்லிம் பள்ளிகள் மற்றும் நன்கொடை அல்லது வக்ப் சட்டவாக்கத்தின் பொறுப்புக்களை பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

1. மஸ்ஜித் கட்டுவதற்கான அனுமதி வழங்குதலும் பதிவு செய்தலும்
2. மஸ்ஜித் நிர்வாகக் குழுவை பதிவு செய்தல் மற்றும் அக்குழு தொடர்பான நிர்வாக பொறுப்புக்கள்.

3. மஸ்ஜிதின் கணக்கு விபரங்களை நிர்வகித்தல்.
4. முஸ்லிம்களின் வறுமையைக் குறைப்பதற்குச் செயற்படல்.
5. முஸ்லிம்களின் கல்வியை மேம்படுத்தல்.
6. முஸ்லிம்களின் நலனுக்காக பொருத்தமானதும் அவசியமானதுமான தீர்மானங்களை எடுத்தல்.
7. இஸ்லாமிய சட்டத்தின் படி நன்கொடைகள் வழங்குதல்.

## மஸ்ஜித் நிர்மாணம்

மஸ்ஜித் ஒன்றை நிர்மாணிப்பதில் ஈடுபடுபவர் சுவர்க்கத்தில் மாளிகை ஒன்றை பெறும் பாக்கியத்தை பெற்றுக் கொள்வார் என இஸ்லாம் கற்பிக்கிறது. சில சந்தர்ப்பங்களில் மஸ்ஜித்களை அமைப்பதற்குப் பிரதேச மட்டத்திலிருந்தும், தேசிய மட்டத்திலிருந்தும் உதவிகள் கிடைக்கின்றன.

பிற மதங்களில் மதஸ்தலங்கள் அமைப்பதற்கும், நடாத்துவதற்கும் உலகளாவிய ரீதியில் நிதியுதவிகள் கிடைப்பது போன்றே, மறுமையில் ஈடேற்றம் பெறும் நோக்கில் உலகளாவிய முஸ்லிம்களும் மஸ்ஜித்கள் அமைப்பதற்கு உதவுகின்றனர்.

மஸ்ஜித்கள் அமைக்கும்போது அவற்றுக்கிடையிலான தூரம் பற்றி கருத்திற்கொள்ளப்படாமை சில இடங்களை அவதானிக்கும் போது தெரியவருகிறது. வக்ப் சபை பிரதேசத்தில் உள்ள தேவையைப் பொறுத்து மஸ்ஜித்களை அமைப்பதில் கவனம் செலுத்துகின்றனர். அவ்வாறே அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவும் இது பற்றி கவனம் செலுத்திச் செயற்படுவதால் இனிமேலும் இவ்வாறான தவறுகள் ஏற்படாது என உறுதியாகத் தெரிவிக்கிறோம்.

## மஸ்ஜித் நிர்வாகம்

ஊழியர்களின் சம்பளம், மாதாந்த மின்சார மற்றும் நீர் கட்டணம், கட்டடப் பராமரிப்பு போன்ற செலவுகள் மஸ்ஜிதின் அங்கத்தவர்களின் உதவியினால் ஒவ்வொரு மாதமும் பூர்த்தி செய்யப்படுகிறது. ஒவ்வொரு மஸ்ஜிதும் தமது வரவு செலவினை சரியான முகாமைத்துவத்துடன் மேற்கொள்ள கடமைப்பட்டுள்ளது.


உலக உரிமையாக 'யுனெஸ்கோ' அறிவித்துள்ள புறக்கோட்டை சிகப்பு பள்ளிவாயல்

பூரண வெளிப்படைத் தன்மையுடன், பாராளுமன்ற சட்டவாக்கம் மூலம் சட்ட ரீதியாக நடைமுறையில் உள்ள மஸ்ஜித் தொடர்பான செயற்பாடுகள், எவ்வாறு சட்ட விரோதச் செயல்களாக முடியும்? எமது தாய் நாட்டில் கட்டப்பட்டுள்ள முதலாவது பள்ளிவாயலாக கருதப்படும் பேருவளை அப்ரார் பள்ளிவாயல் மற்றும் புறக்கோட்டை சிகப்பு பள்ளிவாயல் ஆகியவற்றை வரலாற்று முக்கியத்தும் மிக்க உலக உரிமைகளாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

## மஸ்ஜிதும் முஸ்லிம் சமூகமும்

மேலே குறிப்பிட்ட காரணங்கள் மூலம் பிற மதத்தவர்கள் அவர்களது மதஸ்தலங்களை பயன்படுத்துவதை விட முஸ்லிம்கள் மஸ்ஜித்களை அதிகமாகப் பயன்படுத்துவதோடு மஸ்ஜித்களுடன் அதிக தொடர்பும் வைத்திருக்கின்றனர் எனத் தெளிவாகின்றது. அதனால் சனத்தொகை விகிதத்தை மாத்திரம் வைத்து தேவையான மதஸ்தலங்களை அமைப்பது என்பது நியாயமற்ற செயல் என்பதை உணர்வீர்கள் என நம்புகிறோம்.

மேற்கூறியது போன்று தொழுகையை நிறைவேற்றும் போது "சுஜூத்" என்னும் முழங்காலில் இருந்து நெற்றியை நிலத்தில் வைத்திருக்கும் நிலைக்கு பொதுவாக ஒருவருக்கு ஆகக் குறைந்தது வர்க்க அடி 2 X 4 = 8 இடம் தேவைப்படுகிறது. இதன்படி 200 பேர் கொண்ட ஒரு சிறு குழுவினருக்கும் எவ்வளவு இடம் தேவைப்படும் என உங்களால் ஊகிக்க முடியும் என நம்புகிறோம். இது வழிபாட்டுக்குத் தேவையான இடம் மாத்திரமே. இது தவிர மஸ்ஜித் ஒன்றில் இருக்க வேண்டிய சில அம்சங்கள் இருக்கின்றன.

மஸ்ஜிதில் தொழுகையை நடாத்தும் இமாமுக்கு (தொழுகையை நடாத்தும் முஸ்லிம் மதகுரு) மற்றும் ஊழியர் இருவருக்கு தங்கும் வசதிகள் மஸ்ஜிதில் கட்டாயம் இருக்க வேண்டும். மஸ்ஜிதின் அளவைப் பொறுத்து சேவை செய்வோரின் எண்ணிக்கை மாறலாம்.


தொழுகையை நிறைவேற்ற முன்னர் வுழூ செய்தல்

தொழுகைக்கு முன் வுழூ எனும் கழுவுதலைக் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டி உள்ளதால் தாமதத்தை ஏற்படுத்தாது அனைவரும் ஒரே நேரத்தில் இதனை செய்து முடிக்க நீர் வழங்கல் முறை ஒன்று அவசியம் மஸ்ஜிதில் அமைந்திருக்க வேண்டும். இதற்காக பாரிய இடமொன்று ஒதுக்கப்படல் வேண்டும்.

தொழுகைக்குக் கலந்து கொள்ளும் நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அவர்களுக்கான மலசல கூட வசதிகள் அமைக்கப்படல் வேண்டும். நிர்வாகப் பணிகளுக்கு காரியாலய வசதிகள் இருக்க வேண்டும். பெண்களுக்கும் தனியான இடம் ஒதுக்கப்படல் வேண்டும். இவை அனைத்தையும் கருத்திற்கொள்ளும் போது முஸ்லிம்கள் குறைவாக வாழும் இடங்களில் கூட எவ்வளவு பெரிய மஸ்ஜித் இருக்க வேண்டும் என உங்களால் ஊகிக்க முடியும் என நாம் நம்புகிறோம்.

இக்காரணங்கள் அனைத்தையும் கலந்தாலோசிக்கும் போது முஸ்லிம் சமூகத்துக்கு மஸ்ஜித்கள் எவ்வளவு முக்கியமானது என்பதை விளங்கிக் கொள்ளலாம். மஸ்ஜித்கள் அனைத்துமே பக்தியுள்ள, பண்பாடுமிக்க, நல்ல பிரஜைகளை உருவாக்கும் மதஸ்தலங்களாகும். மாறாக அவை சட்ட விரோத அல்லது சமூக விரோத செயல்களை செய்யும் நிலையங்கள் அல்ல என்பதை தீர்க்கமாக வலியுறுத்துகிறோம்.

சமாதானத்தின் மத்தியநிலையமாக விளங்கும் மஸ்ஜிதைப் பற்றி

தெரிந்து கொள்ள விரும்பும் எவருக்கும் மஸ்ஜித் சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்ய நாம் தயாராக இருக்கிறோம். பல்லின, பல்மதங்களைக் கொண்ட சமூகத்தில் ஒவ்வொருவரைப் பற்றியும் புரிந்துணர்வுடன் நடந்து கொள்வது சமூக நல்லிணக்கத்திற்கு அத்தியவசியம் என நாம் கருதுகிறோம். மஸ்ஜித் சுற்றுலாவில் கலந்து கொள்வதன் மூலம் மஸ்ஜித்கள் பற்றியும் இஸ்லாமிய கலாசாரம் பற்றியும் அறிந்து கொள்ள மகத்தான வாய்ப்பாக அமையும் என எதிர்பார்க்கிறோம். தயவு செய்து எங்களுடன் இணையுங்கள். உண்மையை தெரிந்து கொள்ளும் வழி எப்பொழுதும் திறக்கப்பட்டுள்ளது. இன்னும் மஸ்ஜித்களுக்கு முஸ்லிம் அல்லாதோரை அழைப்பதற்கு இதற்கு முன்னரே நாம் செயற்பட்டிருக்க வேண்டும் என்பதை கண்ணியமாக ஒத்துக் கொள்கிறோம். ஆகவே இத்தவறை நாம் திருத்திக் கொள்ள தயாராக இருக்கிறோம். சந்தேகம் மற்றும் நம்பிக்கையின்மையை நீக்கி எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள முடியுமான சூழலை அமைத்துத் தர நாம் முழு மனதுடன் தயாராக இருக்கிறோம்.

## மதஸ்தலங்கள் பற்றிய மதக் கருத்துக்கள்

### இஸ்லாமிய போதனைகள்

பிற மதஸ்தலங்கள் பற்றிய இஸ்லாமிய போதனைகளில் முதலில் கவனம் செலுத்துவோம். இஸ்லாமிய போதனைகளின் படி பிற மதஸ்தலங்களுக்கு பூரண சுதந்திரமும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளதை புராதன இஸ்லாமிய ஆட்சிக் காலங்களில் இருந்து தொடர்ந்து வரும் உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்தலாம்.

முஹம்மத் நபியவர்கள் மதீனாவில் குடியேறியதும் அந்நகரின் தலைவராக முக்கியத்துவம் கொடுத்த பணி யாதெனில், மனித வரலாற்றிலே முதன் முதலாக ஆவணப்படுத்தப்பட்ட, மனித உரிமைகள் பற்றிய யாப்பை (சாசனத்தை) உருவாக்கியதாகும். அதன்படி அந்நகரில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள், யூதர்கள் மற்றும் பாரம்பரியமாக மதங்களை பின்பற்றியவர்களின் மத உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

இதன் மூலம், இஸ்லாம் பிற மதங்கள் தொடர்பாக மதிப்பும் கருணையும் மிக்க கொள்கையையே கொண்டுள்ளது என நிரூபிக்கப்படுகிறது. அவ்வாறே யுத்த வேளைகளின் போது பிற மத வழிபாட்டுத் தலங்களை மற்றும் பிற மதகுருமார்களை தாக்குவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, அவற்றை பாதுகாப்பது இஸ்லாமியப் படையினரின் முக்கிய கடமையாகவும் கருதுகின்றது.

இதற்கு சிறந்த உதாரணமாக விளங்குவது, ஸ்பெயினில் தொடர்ந்து காணப்பட்ட 800 வருட இஸ்லாமிய ஆட்சியின் போது யூதர்களுக்கு வழங்கப்பட்ட மத சுதந்திரமாகும். இதன்போது அவர்களின் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மதகுருமார்களின் பாதுகாப்பும் வணக்க வழிபாடுகளை மேற்கொள்வதற்கான பூரண சுதந்திரமும் உறுதிசெய்யப்பட்டிருந்தன. இது யூதர்களின் பொற்காலம் என யூத வரலாற்று அறிஞர்கள் விளக்குகின்றனர்.

துரதிர்ஷ்ட வசமாக தற்போதைய காலகட்டத்தில் மதத்தை தவறாக புரிந்துகொண்ட தீவிரவாதக் கூட்டத்தினர் இஸ்லாத்தில் சிறப்பாக கூறப்பட்டு, வலியுறுத்தப்பட்டுள்ள சமாதானம், நல்லிணக்கம், பிறரை மதித்தல் மற்றும்

பரஸ்பர உறவைப் பேணல் போன்ற நற்குணங்களை மீறி, காட்டு மிராண்டித் தனமாக நடந்துகொள்வதனால் இஸ்லாத்தைப் பற்றிய தவறான கற்பனை உருவாக்கப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்கிறோம்.

அவ்வாறே இப்பிரிவினர் இஸ்லாம் விரோத இஸ்ரேல் அரசின் "மொசாத் உளவுத்துறை" உடனும் "சில மேற்கத்தேய ஊடகங்கள்" உடனும் ரகசிய தொடர்புகள் வைத்துக் கொண்டு இஸ்லாமிய மதத்துக்கு எதிராக சதிகார செயற்திட்டங்களில் ஈடுபடுகிறார்களா? மேலும் மேற்குலகின் சதிகள் இவற்றின் பின்னால் காணப்படுகின்றதா? என்ற பலத்த சந்தேகங்கள் முஸ்லிம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

ஆனாலும் இலங்கை முஸ்லிம் மக்கள் மிக சாந்தமானவர்களாக காணப்படும் அதேநேரம், எந்தசந்தர்ப்பத்திலும், ஒன்றுகூடி நாட்டின் சமாதானத்துக்கோ அல்லது நாட்டின் ஐக்கியத்திற்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்பட்டதில்லை என பொறுப்புணர்வுடன் தெரிவிக்கிறோம்.

## பௌத்த போதனைகள்

பிற மதங்கள் பற்றிய புத்த பெருமானின் கொள்கைகளை ஆராய்வது இக்கட்டுரைக்கு மேலும் மெருகூட்டும் என நம்புகிறோம். இது பற்றி பேராசிரியர் எஸ்.ஐ. கமகே அவர்களால் எழுதப்பட்ட "பௌத்த சமூக நோக்கு, பௌத்த வரலாறு மற்றும் பௌத்த கலாசாரம்" எனும் நூலிலிருந்து ஒரு பகுதி பின்வருமாறு சுருக்கமாக தரப்பட்டுள்ளது.

"பிராமஜால நீதி மொழியில் கூறப்பட்டுள்ளதற்கு அமைய புத்தருடைய காலத்தில் பாரத தேசத்தில் அறுபத்திரண்டு நம்பிக்கைகள் காணப்பட்டன. ஆனாலும் புத்த பெருமான் பிற மத போதகர்களையோ அவர்களின் போதனைகளையோ கண்டித்தொழிக்க முன்வரவில்லை. அத்துடன் அப்போதனைகளில் இருந்த நல்லவற்றை மெச்சினார்.

அத்துடன் புத்த பெருமான் மதங்களுக்கிடையிலான நல்லுறவை மதித்தார். அவர் பல்வேறுபட்ட மதபோதகர்களிடம் சென்றார். அவர்களுடன் கலந்துரையாடினார். சில ஆலயங்களுக்கு புத்த பெருமான் செல்கையில் அங்கிருந்த மதகுருமார்கள் தமது சீடர்களை அமைதிப்படுத்தி புத்த பெருமானை மதிப்புடன் வரவேற்றனர். சூல சகுளுதாயி பரிப்ராஜக எனும் ஆசிரியர் புத்த பெருமான் தமது ஆலயத்துக்கு வருவதைக் கண்டு தனது சீடர்களை அமைதிப்படுத்தினார். அவ்வாறே புத்த பெருமான் வஜ்ஜகொத்த பரிப்ராஜகவின் ஆலயத்துக்கும் அடிக்கடி சென்றார்."

எந்த மதத்தை சார்ந்த எந்த ஒரு நபருக்கும் புத்த பெருமான் எந்த விடயத்தையும் அன்பாக தெளிவுபடுத்தினார். எச்சந்தர்ப்பத்திலும் அவரின் போதனையின் போது பிறரை கோபப்படுத்தியதில்லை. புத்த பெருமானின் மதப் பற்று மூலம் தெளிவாவது யாதெனில் அவர் ஏனைய மத சம்பிரதாயங்களை குற்றம் சாட்டவில்லை என்பதாகும்.

அதன்படி புத்த பெருமான் அனைத்து மதங்களைப் பற்றியும் அன்பான, மதிப்பான எண்ணத்தைக் கொண்டிருந்தார். அதே மனப்பாங்கு சமூகத்தில் எல்லா

மதத்தையும் சார்ந்த மக்களிடையே இன்றும் காணப்பட்டால் மத ரீதியான சச்சரவுகள் ஏற்படாது. புத்த மதத்தை ஏற்றுக் கொண்ட தர்ம அசோக அரசர் பின்பற்றியதும் புத்த பெருமான் பின்பற்றிய இதே இரக்க சுபாவமிக்க மதக் கோட்பாடுகளே ஆகும். (பக்கம் 98 தொடக்கம் 101 வரை)

## முடிவுரை

நம் ஒவ்வொருவரினதும் மதஸ்தலங்களை எதிர்ப்பதையும் குறை கூறுவதையும் விட, முதலில் நாம் செய்ய வேண்டியது, அனைத்து மதங்களுக்கும் பொதுவான, சமூகத்திற்கும் பண்பாட்டுக்கும் விரோதமாகச் செயற்படும் அமைப்புக்கள் பற்றி ஒன்றுகூடி செயற்படுவதல்லவா? இவற்றில் ஓர் உதாரணமாக நாளுக்கு நாள் அதிகரிக்கும் மதுபான விற்பனை நிலையங்களை குறிப்பிடலாம். புனித தலதா மாளிகை அமைந்துள்ள கண்டியில் மட்டும் 45 மதுபான விற்பனை நிலையங்கள் உள்ளன என தெரியவருகிறது. இவற்றுள் 9 தலதா வீதியிலும் அதற்கு அண்மையிலும் அமைந்துள்ளன. அனுராதபுர, ஸ்ரீ பாத போன்ற புனிதமான இடங்களிலும் நிலைமை இது போன்றதேயாகும். அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள 3332 மதுபான விற்பனை நிலையங்களும் சுமார் 2 இலட்ச போலி மதுபான விற்பனை நிலையங்களும் எமது தர்மத் துவீபத்தில் உள்ளதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. அனைத்து மதஸ்தலங்களை ஒன்று சேர்த்தாலும் மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையை தாண்டிச் செல்ல முடியுமா என சற்று சிந்தித்து பாருங்கள். எங்கள் கூட்டு முயற்சி பிற மதஸ்தலங்களுக்கு எதிராக ஈடுபடுத்தப்படாமல் இவ்வாறான சமூக விரோத நிலையங்களுக்கு எதிராக ஈடுபடுத்தப்படின் பண்பாடுமிக்க, நன்னடத்தையுள்ள ஒரு பரம்பரையை உருவாக்க முடியும் அல்லவா?

அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள 3332 மதுபான விற்பனை நிலையங்களும் சுமார் 2 இலட்ச போலி மதுபான விற்பனை நிலையங்களும் எமது தர்மத் துவீபத்தில் உள்ளதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

அனைத்து மதங்களும் பண்பாடுமிக்க சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்குடனேயே செயற்படுகின்றன. இக்குறிக்கோளை அடிப்படையாக வைத்து, மதங்களை விமர்சிப்பதற்காக நமது திறனையும் பலத்தையும் செலவளிப்பதைத் தவிர்ந்து, முழுச் சமுதாயத்தினதும் பண்பாட்டை சீரழிக்கும் காரணிகளுக்கு எதிராக நமது கவனத்தைச் செலுத்தி, அவரவரது மத ரீதியான தேவைகள் தொடர்பாக புரிந்துணர்வுடன் செயற்பட்டு, மதங்களுக்கிடையே அமைதியையும் நல்லிணக்கத்தையும் உருவாக்கச் செயற்படுவது தலைசிறந்த செயல் என நாம் நினைக்கிறோம்.



சமூகங்களுக்கு இடையில் பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கும் நோக்கில் எழுதப்படும் இந்த "சமூகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்" எனும் கட்டுரைத் தொடரிலிருந்து நாம் எதிர்பார்ப்பது, இலங்கையில் அனைவருக்கும் அமைதி, சமாதானம் மற்றும் சகோதரத்துவம் நிறைந்த, ஆரோக்கியமானதொரு சூழலை கட்டியெழுப்புவதேயாகும். இச்சிறந்த எதிர்பார்ப்பை அடைந்து கொள்வதற்கு எம்முடன் கைகோர்த்துக் கொள்ளுமாறு தயவுடனும், மதிப்புடனும் அழைக்கின்றோம்.

கட்டுரை 01 மாமிச நுகர்வு
கட்டுரை 02 முஸ்லிம்களது சனத்தொகை வளர்ச்சி தொடர்பான அச்சம்
கட்டுரை 03 முஸ்லிம் பள்ளிவாசல்களின் அசாதாரணமான பரவல்
கட்டுரை 04 ஆசிய பௌத்த நாடுகள் இஸ்லாமிய மயப்படுத்தப்படல்
கட்டுரை 05 அல் - காயிதா, அல் - ஜிஹாத் - இஸ்லாமிய பயங்கரவாதத்தின் யதார்த்தம்
கட்டுரை 06 கடும்போக்குவாத இஸ்லாமிய ஆடை அணிகலன்கள்

சமூகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் மேலதிக பிரதிகளுக்கு அழையுங்கள்:

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
281, ஜயந்த வீரசேகர மாவத்தை, கொழும்பு -10, இலங்கை
தொலைபேசி: +94 11 7490490 பெக்ஸ்: +94 11 2435859
மின் அஞ்சல்: info@acju.lk
இணையம்: www.acju.lk

UNITY HUB
த.பெ. இலக்கம்: 134, தெஹிவளை.
தொலைபேசி: +94 778 451 919 +94779 481 919
+94 779 741 919
மின் அஞ்சல்: teamunityhub@gmail.com
இணையம்: www.unityhub.org

ISBN 978-955-7605-00-5

PRINTED BY OFFICEPAL (PVT) LTD.
131B, Kolonnawa Road, Dematagoda, Colombo 09. Hotline: 0777709939